**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 25.10.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 22.10.2018

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியானது தற்போது 65804 மக்கள் தொகையும் 8.15 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட 27 வார்டுகள் அடங்கிய முதல் நிலை நகராட்சியாகும். இந்நகரில் 16451 குடியிருப்புகளும், 2725 வர்த்தக நிறுவனங்கள், 25-க்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்கள், தாலுக்கா அலுவலகம் மற்றும் இதர அரசு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றது.

இந்நகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பையின் அளவு 18 M.T ஆகும். மேற்படி குப்பைகள் குடியிருப்புகள், பேருந்து நிலையம், தினசரி சந்தை, வாரச்சந்தை மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் துப்புரவுப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 135 ஆகும். தற்போது வயது முதிர்வின் காரணமாகவும், இறப்பின் காரணமாக 45 காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில், 90 பணியிடங்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, அன்றாடம் உற்பத்தியாகும் குப்பைகளை அந்தந்த பகுதிகளில் உரம் தயாரிக்க 2 MCC கட்ட தற்சமயம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகரின் சுகாதார நலன் கருதி, பிரதான சாலைகளில் தினமும் இருவேளை தெருக்கூட்டுதல், குடியிருப்புப் பகுதிகளில் தினசரி 1 வேலை தெருக்களைக்கூட்டி, சுத்தமாக பராமரிக்கவும் நகரின் வணிக நிறுவனங்களிலுள்ள சாக்கடை சுத்தம் செய்யவும், முக்கிய இடங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கவும், முதல் நிலை சேகரிப்புக்கு வாகனங்கள் பயன்படுத்தவும், BOV மற்றும் LCV வாகனங்களுக்கும், (கனரக வாகனங்கள்) பயன்படுத்தவும், கீழ்கண்ட விவரப்படி துப்புரவுப் பணியாளர்கள் தேவையாக உள்ளன. மேலும் இந்நகரின் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், வாரச்சந்தை போன்ற பகுதிகளை முழுமையாக சுத்தமாக வைத்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

| வ. எண். | வேலை வகைப்பாடு | துப்புரவுப் பணியாளர் எண்ணிக்கை (As Per Norms) | வகை | கணக்கீடு | தேவைப்படும் பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு (அல்லது) மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு | 3 பேர் கொண்ட குழு | 16451 (As Per Animator Survey) | 16451X3<br>------------<br>250 | 198 |
| 2 | டம்பர் பிளேசர் லாரி | 1 | 2 டம்பர் பிளேசர் 1 | 2X1 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | சிறிய லாரிக்கு | 3 | 2 டிப்பர் லாரி | 2X3 | 6 |
| 5 | செப்டிக் டேங்க் கிளீனிங் லாரி | 2 | 1 செப்டிக் டேங்க் கிளீனிங் லாரி | 1X2 | 2 |
| 6 | TATA ACE வாகனத்திற்கு | 2 | 1TATA ACE வாகனத்திற்கு | 2X1 | 2 |
| 5 | பேருந்து நிலையம் சுத்தம் செய்ய சி மற்றும் டி பேருந்து நிலையத்திற்கு | 2 | 1 | 1x2 | 2 |
| 6 | தினசரி சந்தை | 2 | 1 | 1x2 | 2 |
| 7 | COMPOST – 10 டன் குப்பைக்கு 1 நபர் வீதம் 18 டன்னுக்கு 2 நபர்கள் | 2 | 1 | 2X1 | 2 |
| **மொத்தம் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை :** | | | | | **216** |

அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.4.1997–இல் நிர்ணயிக்கப்பட்ட அளகோலின்படி (NORMS)

| | | |
|---|---|---|
| 1. | அரசாணை எண்.101 விதிமுறைகளின்படி தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை | 216 |
| 2. | அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை | 135 |
| 3. | தற்போது பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை | 90 |
| 4 | சுயஉதவிக்குழுக்கள் / தனியார் ஒப்பந்தத்தின் மூலம் பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்கள் | 126 |

நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளுதல் – மதிப்பீட்டு தொகை கணக்கீடுதல்

நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் துப்புரவுப் பணியாளர்களை நியமித்து துப்புரவுப் பணி மேற்கொண்டால் மேற்படி 126 துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் இதரபடி விவரங்கள் கீழ்கண்டவாறு.

பணியாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கவேண்டிய ஊதிய விவரம்.

| | | |
|---|---|---|
| அடிப்படை ஊதியம் | `. | 15700 |
| அகவிலைப்படி | `. | 785 |
| வீட்டு நிகர வாடகைபடி | `. | 1500 |
| நகர ஈட்டுபடி | `. | 360 |
| மருத்துவபடி | `. | 300 |
| சலவைப்படி | `. | 200 |
| ஓய்வூதிய பங்களிப்பு | `. | 1650 |
| **மொத்தம்** | `. | **20495** |

126 பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்க வேண்டிய மொத்த ஊதியம் 126x20495 = 25,82,370/-

| | | | |
|---|---|---|---|
| அ | 126 நபர்களுக்கு 12 மாதத்தின் வழங்க வேண்டிய ஊதியம் 2582370x12 | `. | 3,09,88,440 |
| ஆ | சரண்டர் விடுப்புத் தொகை (15700+785+1500+360) 126 நபருக்கு ஓராண்டிற்கு ஈட்டிய விடுப்பு தொகை ஆகும் சம்பளம் | `. | 7850+393+750+180<br><br>ஒரு நபருக்கு 9173<br>11,55,798 |
| இ | சீருடை நபர் | `. | 1200 |
| | 126 நபர்களுக்கு x 1200 | `. | 151,200 |
| | 1 நபர்க்கு காலனி x 155<br>126 X 155 | `. | 19,530 |
| | பாதுகாப்பு உபகரணங்கள் | | |
| | ஒரு பணியாளர்களுக்கு ஒளிரும் ஜாக்கெட், காலுறை, மழைகோட் கையுறை முகவுரை தலைக்கவசம் 126 நபர்களுக்கு x 3465 | `. | 4,36,590 |
| | 12 மாதத்திற்கு ஆகும் செலவு | `. | **32751558** |

சுய உதவிக் குழுக்கள் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலமாக மனித சக்தியைப் பெற்று (MAN POWER) துப்புரவுப் பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை கணக்கிடுதல் (Out Sourcing of Manpower From SHG) (Contract basis)

| | | |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படவுள்ள பணியாளர்கள் | – | 126 |
| மாவட்ட ஆட்சியர் அவர்களின் பணியாளர்கள் தினக்கூலி விவரம் (2018–2019) | – | 360 |
| ஒரு நபர்க்கு 31 நாட்கள் வழங்க வேண்டிய தொகை | – | 11,160 |
| 126 நபர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் | – | **14,06,160** |
| ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு (14,06,160 X 12) | – | **16873920** |

| | | |
|---|---|---|
| ஒரு மாத்திற்கு ஆகும் செலவு (EPF 13.15%) | 184910x12 | 2218920.00 |
| ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு (ESI 4.75%) | 66793x12 | 801516.00 |
| Administrate Charge 10% | 140616 x12 | 1687392.00 |
| LIC (Per Head Rs.600/- Per Annam) | – | 75600.00 |
| Safety equipment (3500/- per head 1year | – | 441000.00 |
| Uniform (Per Head Rs.1200/- Per Annam) | – | 151200.00 |
| **மொத்தம்** | | **5375628** |

<u>**நோக்குப் பட்டியல்**</u>

| | |
|---|---|
| 126 துப்புரவுப் பணியாளர்களை நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் (நிரந்தர பணியாளராக) பணி நியமனம் | **`. 3,27,51,558.00** |

| | |
|---|---|
| செய்யப்பட்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை | |

| | |
|---|---|
| மேற்கண்டப் பணியினை சுய உதவிக் குழுக்கள் / தனியார் ஒப்பந்தத்தின் மூலமாக மேற்கொண்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் | **`. 2,22,49,548.00** |
| வித்தியாசம் | **`.1,05,02,010.00** |

எனவே, இந்நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களில் உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன்படி பிரித்து சேகரம் செய்து இறுதியாக்கம் பணிக்கு தேவையான 126 துப்புரவுப் பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் `. 230/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ. மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் பொது நிதியிலுருந்தும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டண நிதியிலுருந்தும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/ 1475/18)

**தீர்மானம் எண். 427**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018–19–இன்கீழ் `. 300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்க்கொள்ள 12.09.2018 அன்று மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கீழ்க்கண்டுள்ளவாறு வெளியிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | Business standard | தமிழ்நாடு | `. 1350/– |
| 2) | மாலைமுரசு | தமிழ்நாடு | `. 20000/– |
| | | **மொத்தம்** | **`. 21350/–** |
| | | மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | `. 1067.50 |
| | | **ஆக மொத்தம்** | **`. 22418/–** |

விளம்பரக் கட்டணம் `. 22418/– ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/987/18)

**தீர்மானம் எண். 428**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 4 பிரிவுகள் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய ஐந்து இடங்களில் கணினி மூலமாக கைரேகை வருவாய் பதிவு (Bio metric) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் `. 375000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2399/18)

**தீர்மானம் எண். 429**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை எடுத்துச் செல்லும் நான்கு வாகனங்களுக்கு செல்லுமிடம் அறியும் GPS கருவி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் `. 100000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2400/18)

**தீர்மானம் எண். 430**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்கள் குடிநீர் இணைப்பு பெற துண்டு பிரசுரங்கள் 10000 எண்ணிக்கை அச்சடித்து விநியோகிக்கவும், தட்டி பேனர்கள் (Flex) இரண்டு எண்ணிக்கை அச்சடிக்கவும் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | துண்டு பிரசுரங்கள் 10000 நெ. | தட்டி பேனர்கள் 2 எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1) | சித்ரா பிரஸ் | 5500 | 3000 | 8500 |
| 2) | ஹரினி பிரிண்டர்ஸ் | 6000 | 3100 | 9100 |
| 3) | விஜய் ஆப்செட் பிரிண்டர்ஸ் | 5900 | 3000 | 8900 |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய சித்ரா பிரஸ் விலைப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ளவும், செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.

(இ2/541/18)

**தீர்மானம் எண். 431**

அனுமதிக்கப்பட்டது

(6) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AS 0110 வாகனத்தின் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி பெறப்பட்டது. மேலும், இப்பணிக்கு ஆகும் செலவினம் `. 100000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் `. 100000/– வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(எச்1/2531/18)

**தீர்மானம் எண். 432**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் DBC பணியாளர்கள் மூலம் தினசரி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் பணிபுரியும் DBC பணியாளர்களுக்கு வீடு வீடாக சென்று பொது மக்களிடம் கையொப்பம் பெறும் படிவங்கள், டார்ச்லைட், 5 லிட்டர் கேன்கள் தேவைப்படுவதால், அவற்றை கீழ்க்காணும் எண்ணிக்கையில் வாங்குவதற்கு உத்தேச செலவினம் `. 70000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | இனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | படிவங்கள் | 20000 |
| 2) | டார்ச்லைட் | 60 |
| 3) | 5 லிட்டர் கேன் | 60 |

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினங்களை பொது நிதியிலிருந்து பணி மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(எச்1/2577/18)

**தீர்மானம் எண். 433**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தினசரி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வீடுகள் மற்றும் கடைகள் மொத்தம் 18000 கொசுப்புழு ஒழிப்பு வருடாந்திர காலண்டர் ஸ்டிக்கர் மற்றும் smiley ஸ்டிக்கர்கள் (கொசுப்புழு இல்லாத வீடுகளுக்குட்பட்ட) 5000 எண்ணிக்கையில் ஒட்ட வேண்டியுள்ளதால், அவற்றை உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் `. 120000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் பொது நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(எச்1/2578/18)

**தீர்மானம் எண். 434**

அனுமதிக்கப்பட்டது

(9) 2018–19–ஆம் ஆண்டிற்கான இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், அனைத்து ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், டான்காக், பூங்கா காவலர், செயின்மேன், மகப்பேறு உதவியாளர் ஆகிய

பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் அதற்குரிய தையற்கூலியும் வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் `. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3) சீருடைகளை வசந்தம் கோ.ஆப்டெக்ஸ், ஈரோடு என்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கிக்கொள்ள அனுமதிக்கலாம்.

(எச்1/2522/18)

**தீர்மானம் எண். 435**

அனுமதிக்கப்பட்டது

(10 ) இந்நகராட்சிக்கு 2018–19–ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்குத் தேவையான படிவங்கள், A4 பேப்பர், லீகல் பேப்பர், எழுதுபொருட்கள், சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி கட்டணங்கள் வசூல் செய்வதற்குத் தேவையான இரசீதுகள் வாங்க `. 600000/– (ஆறு இலட்சம்) செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்க்கொள்ளலாம்.

(பி3/1412/16)

**தீர்மானம் எண். 436**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இராசிபுரம் நகராட்சி கழிவுநீர் மண்டலம் 2, 4 மற்றும் 5(அ) மற்றும் 6 பகுதிகளிலுள்ள 6500 குடியிருப்புகளுக்கு உட்புற கழிவுநீர் இணைப்புகள் ஏற்படுத்தும் `. 450.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 01.10.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. ஹரி கன்ஷ்ரக்ஸன்ஸ், 191, சேசன் தொழிலாளர் காலனி, தாராபுரம் சாலை,
கே.செட்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – மதிப்பீட்டைவிட 4.95% அதிகம்.

மூன்றாம் அழைப்பில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக உள்ளதால், பணி மேற்க்கொள்ளப்பட வேண்டிய அவசியம் கருதி ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து வழங்கக் கோரப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் விலை விகிதத்தினை குறைக்க இயலாதென 16.10.2018–ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மூன்றாவது அழைப்பு என்பதாலும், பணியினை விரைந்து முடித்து அரசிற்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதாலும், பணியின் அவசியம் கருதி Engineering Manual Class 2.7.2.-இன்படி மதிப்பீட்டைவிட 5% அதிகமாக உள்ள பணிகளுக்கு நகர்மன்றம் அனுமதி வழங்கலாம் என்பதால், மதிப்பீட்டைவிட 4.95% கூடுதலான விலை விகிதம் வழங்கியுள்ள திரு Hari Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஒப்பந்தப்புள்ளி மூன்றாம் அழைப்பாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதியும், மதிப்பீட்டைவிட 4.95% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Hari Construction ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 437**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை (Bio Minings) அகற்ற இரண்டாம் அழைப்பாக **15.09.2018** அன்று கீழ்க்கண்டுள்ளவாறு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | Business standard | தமிழ்நாடு | `. 1350/– |
| 2) | மாலைமுரசு | தமிழ்நாடு | `. 20000/– |
| | | **மொத்தம்** | **`. 21350/–** |
| | மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | | `. 1067.50 |
| | | **ஆக மொத்தம்** | **`. 22418/–** |

`. 22418/– விளம்பரக் கட்டணம் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 438**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி கழிவுநீர் மண்டலம் 1, 3 மற்றும் 5 பகுதிகளிலுள்ள 8500 குடியிருப்புகளுக்கு உட்புற கழிவுநீர் இணைப்புகள் ஏற்படுத்தும் `. 600.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 01.10.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் வருமாறு.

1) திரு வி.பி. அழகையன், ஸ்ரீ கிருஷ்ணா நகர் (Extension), தாராபுரம் சாலை,
கே.செட்டிபாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 608 – மதிப்பீட்டைவிட 4.98% அதிகம்.

மூன்றாம் அழைப்பில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.98% அதிகமாக உள்ளதால், பணி மேற்க்கொள்ளப்பட வேண்டிய அவசியம் கருதி ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து வழங்கக் கோரப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் விலை விகிதத்தினை குறைக்க இயலாதென 16.10.2018–ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மூன்றாவது அழைப்பு என்பதாலும், பணியினை விரைந்து முடித்து அரசிற்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதாலும், பணியின் அவசியம் கருதி Engineering Manual Class 2.7.2.-இன்படி மதிப்பீட்டைவிட 5% அதிகமாக உள்ள பணிகளுக்கு நகர்மன்றம் அனுமதி வழங்கலாம் என்பதால், மதிப்பீட்டைவிட 4.98%

கூடுதலான விலை விகிதம் வழங்கியுள்ள திரு வி.பி. அழகையன், திருப்பூர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஒப்பந்தப்புள்ளி மூன்றாம் அழைப்பாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதியும், மதிப்பீட்டைவிட **4.98%** கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு வி.பி. அழகையன், திருப்பூர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 439**

அனுமதிக்கப்பட்டது

**( 14 )** இராசிபுரம் நகராட்சி குடிநீர் லாரிகள் எண். ட்டி என் **28 BZ 8975** மற்றும் ட்டி என் **28 BZ 9021** ஆகிய வாகனங்களின் தகுதிச் சான்றுகள் முறையே **26.12.18** மற்றும் **06.12.18** தேதியில் முடிவடைகிறது. எனவே, மேற்காணும் இரு வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வாகன விநியோக நிறுவனமான சேலம் M/s. TV சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் நிறுவனத்தில் பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2488/18)

**தீர்மானம் எண். 440**

அனுமதிக்கப்பட்டது

**( 15 )** இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கு தேவையான கணினி உபகரணங்களின் விவரங்கள் வருமாறு.

1) Desktops (4 GB RAM, 300 GB, HDD, Operating system – Win 8/9/10) – 2 Nos.
2) Printer - 1 No.
3) Scanner - 1No.

மேற்காணும் உபகரணங்கள் DGST விலையில் வாங்கி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் `. **205000/–**க்கு மன்ற அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2173/18)

**தீர்மானம் எண். 441**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.